★ ஏப்ரல் முதல் வாரத்தில் 4-ம் கட்டப் பேச்சு?


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 29 இதழ் 31
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-3-1995


[லண்டன்]

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின் 4-வது கட்டப் பேச்சு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் மீண்டும் இடம் பெறக்கூடும் என்று பி. பி. சி. சந்தேசிய தெரிவித்தது.

இதுபற்றிய கடிதமொன்றை ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ளாராம்.

அநேகமாக ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அல்லது 10-ம்தேதி இந்த பேச்சுவார்த்தையை

(2ம் பக்கம் பார்க்க)

★ சமாதானப் பேச்சைத் தொடர்வதற்கு

## சந்திரிகா நாடு திரும்பியதும் தீர்மானிக்கப்படும்

[கொழும்பு]

முட்டுக்கட்டை நிலையிலிருக்கும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான வழிவகை குறித்து ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பிய பின்பே அரசு தீர்மானிக்கும் என பிரதி அமைச்சர் திரு. ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

தற்போது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்ப இன்னும் நான்கு ஐந்து நாட்கள்

(2ம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

# டென்மார்க் மாநாட்டில் புலிகள்

# உலகத் தலைவர்களுக்கு மகஜர்

## தமிழர் நிலை பற்றி தெரிவிப்பு

[ஹோபன்ஹேகன்]

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளை துரிதப்படுத்துமாறு இலங்கை அரசை உலகத்தலைவர்கள் வற்புறுத்த வேண்டும் என விடுதலைப்புலிகள் உலகத் தலைவர்களிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

டென்மார்க்கின் தலைநகர் ஹோபன்ஹேகனில் நடைபெறும் சமூக அபிவிருத்தி தொடர்பான உலக உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட 120க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களிடமே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்னையின் வரலாற்றுப் பின்னணியையும் தற்போதைய நிலையையும் விளக்கி 'சமூக அபிவிருத்தியும் இலங்கை இன நெருக்கடியும்'' எனும் தலைப்பிலான பல பக்க அறிக்கை ஒன்று விடுதலைப் புலிகளின்

(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைத் தீர்வுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு உற்சாகம் தருகிறது - சந்திரிகா கூறுகிறார்

(ஹோபன்ஹேகன்)

தேசியப் பொது வாழ்வில் முழுச் சமுதாயத்தினரும் பங்கேற்கும் வகையில், இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது அவசியம் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

டென்மார்க் தலைநகர் ஹோபன்ஹேகனில் நடைபெற்ற சமூக வளர்ச்சி குறித்த உச்சி மாநாட்டில் நேற்று உரையாற்றுகையில் திருமதி

(2ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் நிலை பற்றி அமைச்சர் ரத்வத்தை ஆராய்வு

(கொழும்பு)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் 16 யுத்தக கைதிகளின் நிலை குறித்து, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் ஆராய்ந்துள்ளார்.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி, தம்மை விடுவிக்குமாறு இந்த யுத்தக் கைதிகள் கடந்த 12 நாட்களில் பல தடவைகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதி அமைச்சர்

(4ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகள் நிலை மோசமடைகிறது

(யாழ்ப்பாணம்)

பன்னிரண்டாவது நாளாக நேற்று உண்ணாவிரதத்தைத் தொடரும் யுத்தக் கைதிகள் நிலை அபாயகரமான கட்டத்தை அடைந்துவிட்டதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வயிற்றோட்டம், வாந்தி, வயிற்று நோவு, காய்சல் போன்ற நோய்களால் இவர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் பேசும் சக்தியை முற்றாக இழந்துவிட்டனர். பலர் ஞாபகசக்தியைப்

(4ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தடையை முற்றாக நீக்கவும்

அமைச்சர் பெர்ணாண்டோபுள்ளே

(கொழும்பு)

வடபகுதி மீதான எரிபொருள் தடையை முற்றாக நீக்கத்தான் வேண்டும் என்று திட்டமிடல் இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு பதில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கு அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருட்களை அனுப்பி வருகின்ற போதிலும் விடுதலைப் புலிகள் தங்களுக்கு தேவையான வாகனங்களுக்கு போதிய எரிபொருட்களை பயன்படுத்தியே வருகின்றார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு 1000 பரல் தார் வருகிறது

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் உள்ள வீதிகளைத் திருத்துவதற்குத் தேவையான தாரை, கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபை 1000 பரல் தாரை யாழ்ப்பாணத்திற்குக் கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். மாநகரசபையும் தாரை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை சுன்னாகம் மின்

(4ம் பக்கம் பார்க்க)

## பதவி உயர்வு விவகாரம் படையினர் சீற்றம்

(கொழும்பு)

இராணுவம் மற்றும் கடற்படையினரிடையே வழங்கப்படும் பதவி உயர்வுகள் தொடர்பாக படைத்தலைமைகளுக்கிடையில் பெரும் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

யுத்தமுனையில் போரிடும் படையினருக்கு தகுதி அடிப்படையில் பதவியுயர்வு வழங்கப்படாமல் கொழும்பில்

(4ம் பக்கம் பார்க்க)

★ புதிய அரசியலமைப்பு மூலம்

## மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லை

(கொழும்பு)

மாகாண அரசுகளை அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு கலைக்க முடியாதவாறு புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுவருகிறது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; புதிதாக அமைக்கப்படும் அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ள அதிகாரப் பரவலாக்கல் அளவுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்

(4-ம் பக்கம் பார்க்க)

## புனித சூசையப்பர் திருவிழா

(அரியாலை)

புலோலி தெற்கு புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 18ந் திகதி திருச்சொரூப பவனியும் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் கூட்டுத்திருப்பலியுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. (59)

## பனை அபிவிருத்தி ஆரம்பக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலகம் மாகாணத் திட்டமிடல் அலுவலக மாவட்டப் பனை அபிவிருத்தி இணைப்புக்குழுவின் கூட்டம் இன்று 13 ம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் தலைமையில் யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -154

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய மைதானத்தில் இம் மாதம் 15ம் கேதி புதன் பி.ப 2 மணிக்கு அதிபர் திரு. இ. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்துகொள்வார்.


UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

Sealed tenders are invited from contractors registered for civil Engineering works with ICTAD for the repairs to Hostel at Jaffna Town.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna until 17-3 95 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee.

1. Refundable Rs. 4500/-
2. Non-refundable Rs. 250/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a. m. on 29-3-95.

Tender forms can be inspected free of charge at Maintenance branch, University of Jaffna during office hours.

**Registrar**

University of Jaffna
P. O. Box 57,
Jaffna. (A-4815


# யாழ். நகர் வீதிகள் விஸ்தரிக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதிகளில் உள்ள பிரதான சந்திகள் அகலமாக விஸ்தரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நன்மைகருதி இச்சந்திகள் அகலமாக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுவருகிறது. இந்த வகையில் யாழ்ப்பாணம் மிட்டாசுக் கடைச்சந்தி, ஆரிய குளம் சந்தி, பருத்தித்துறை வீதி ஆஸ்பத்திரி வீதிச்சந்தி, கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதிச் சந்தி அகிய சந்திகள் விஸ்தரிக்கப்பட்டுச் செப்பனிடப்பட்டுள்ளன.

இச்சந்திகளில் இப்பொழுது வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் சிரமம் எதுவுமின்றி தமது பிரயாணங்களை மேற்கொண்டுவருவதாகவும் இச்சந்திகளில் வாகன விபத்துக்கள் இப்பொழுது பெருமளவு குறைந்திருப்பதாகவும் தெரியவருகிறது. 162-சி

# தலைவர்களுக்கான பயிற்சி 5 நாள் நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களில் உள்ள தலைவர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று இன்று 13 ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரையான ஐந்து நாட்கள் கந்தர் மடம் தமிழர் புனர்வாழ்வுக் கழக பல்துறை பயிற்சிநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியை சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், மனித முன்னேற்ற நடுநிலையம், போரூட்நிறுவனம் ஆகிய நான்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நடாத்துகின்றன இப்பயிற்சியில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த பத்துப் பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பத்துப்பேரும், நல்லூர்/யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஐந்து பேரும் கலந்து கொள்கின்றனர்.

## கிராமிய நிதியம்

[மானிப்பாய்]

யாழ் மானிப்பாய் வீதியில் கிராமிய உற்பத்திக் குழுவின் அனுசரணையுடன் கிராமிய நிதியம் ஒன்று நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் தமிழீழ வைப்பக உத்தியோகத்தர்களும் யாழ் கிராம சேவையாளரும் கலந்து கொண்டனர்.

இந்நிதியத்தின் மூலம் 5 பேருக்கு கடன் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது, 71

# போக்குவரததுச் சபை 400 ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பொலநறுவை மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்கு வரத்துச் சபையை சேர்ந்த 400க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

மேற்படி பஸ் கம்பனியின் பொதுமுகாமையாளருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள தொழிலாளர்கள் பொதுமுகாமையாளரை பதவி நீக்கக் கோரியே கடந்த நான்கு நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பஸ் சாரதிகள், நடத்துனர்கள் மெக்கானிக்குகள் உட்பட அங்குள்ள 400 தொழிலாளரும் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர் கடந்த நான்கு நாட்களாக பொலநறுவையில் பஸ் சேவை ஸ்தமபிதமடைந்துள்ளது. இதனல் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகிருர்கள்.

இவர்களின் வேலைநிறுத்தம் குறித்து போக்கு வரத்து அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (சி)

### சமாதானப்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனதிபதி நாடு திரும்பிய பின்பே அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக் குறித்து தற்போது சமாதானப் பேச்சில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்குவது குறித்கும் சகல தரப்பினருடன் ஆராயவுள்ளதாகவும் கூறப்படுகிறது. -சி

### ஏப்ரல் முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்குமாறு அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் சந்தேசிய மேலும் தெரிவித்தது.

இதேவேளை ஜனதிபதியின் செயலரும், அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான திரு. பாலபத்த பென்டி, நாலாம் கட்டப்பேச்சுக்கு புலிகள் கொழும்புக்கு வரவேண்டுமெனக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (மசி)

### இனப்பிரச்னைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: 10 ஆண்டுகளுக்கு மேலாக இழுபறிப்பட்டுவரும் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு நாம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு, உலகத் தலைவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். இவர்கள் வழங்கிவரும் நம்பிக்கையுடன் கூடிய ஆதரவு எமக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. இதனல் எமது முயற்சி பலன் அளிக்கும் என்ருர். க-ம-சி


வெளிவந்துவிட்டது!

**சமய மஞ்சரி**

— தித்திக்கும் ஆன்மீக மாத இதழ் —

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க:

★ ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
★ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

(எ-4817)


# பதவி நீக்கப்பட்டவர்கள் அமைச்சுக்கு மகஜர்

[மானிப்பாய்]

அரசினல் பதவிநீக்கம் செய்யப்பட்ட யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரிந்த பயிலுநர்கள் யாழ் அரச அதிபரிடம் மகஜரொன்றை சமர்ப்பித்தனர்.

அரச அதிபருடாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு எழுதியுள்ள இம் மகஜரில் தம்மை கடந்த மாதம் 28ந் திகதியுடன் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டதை மீள் பரிசிலனை செய்யுமாறு கோரியுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் சுமார் 300 பயிலுநர்கள் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக பணியாற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது. 71 ரி

கணித பாடத்தில்

# மாணவர்பின்னடைவுபற்றி ஆய்வு நடத்தப்படும்

(உடுவில்)

கடந்த காலங்களில் கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பலர் கணித பாடத்தில்சித்திபெறத் தவறியமைக்கான காரணங்கள் பற்றிக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது சம்பந்தமாக நிறுவனம் 1981 ம் ஆண்டு தொடக்கம் 1992 ம் ஆண்டு வரை க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் முப்பதாயிரம் மாணவர்களின் கணிதபாட பெறுபேறுகள் பற்றிய மதிப்பீட்டினை ஏகற்னவே மேற்கொண்டுள்ளது.

கணிதபாடத்தில் மாணவர்கள் காட்டும் ஆர்வத்தை மதிப்பீடு செய்வதற்கான எழுத்துப் பரீட்சையினை நடத்தவும்' அதன்மூலம் தகவல்களை திரட்டவும் தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியவருகின்றது. 109

# ''தமிழரின் வரலாற்று ஆவணங்கள் பேணப்பட வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

தமிழரின் வரலாற்று ஆவணங்கள் பேணப்படவேண்டியது அவசியமாகிறது. கடந்த 3000 ஆண்டுகளுக்கு மேலாக வடதமிழீழத்தில் தமிழன் வாழ்வு கொண்டான் என்பதைச் செம்மையுறப் பேணுத காரணத்தால் இன்று தமிழன் இம்சிக்கப்படும் நிலைக்கு ஆளாகிவிட்டான்.

சுன்னுகம் மயிலனி சைவ பகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் சமூகக் கல்வி மன்றமும், விவசாயக் கழகமும் இணைந்து நடத்திய வரலாறு நூல் வெளியீடும் விவசாயப் பரிசில் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. இரா சிவசந்திரன் உரையாற்றுகையில் வரலாற்று நூலுக்கு ஆசியுரைகள், அலங்காரங்கள் தேவையில்லை என்று பாடசாலை பின்னணியையும் சேர்த்து எழுதினுல் நல்லது என்றும் கூறினுர்.

பிரதம விருந்தினர் திரு. கோ. கி. வேலாயுதம் இந் நூலின் முதல் பிரதியை வெளியிட்டுவைக்க ஆசிரியை செல்வி கே. ஸ்ரீரஞ்சனு பெற்றுக்கொண்டார். (162)


உ

சிவமயம்

இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்

கலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களின் தர்மகர்த்தா சபைகள்/பரிபாலன சபைகளிற்கான

**அறிவித்தல்**

கலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் அவ்வவ் ஆலயங்களின் தர்மகர்த்தா சபைகள்/பரிபாலன சபைகளிடமிருந்து கொழும்பு-3, கொள்ளுப்பிட்டி புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பற்றுறை அமைச்சின் செயலாளரினுல் நேரடியாக கோரப்பட்டுள்ளது. இதற்கான மாதிரிப் படிவங்களை சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர்களிடமிருந்து பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 24-03.95ம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்ருேம். அதன் பிரதிகளை எமக்கும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கும் அனுப்பிவைக்கவும்.

சி. சக்திகிரிவன்,
கௌரவ செயலாளர்.

இந்து சமயப் பேரவை,
நல்லை ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
8-3-95. (எ-4819)

## மணிவாக்கு

காலத்தின் அருமை தெரிந்து துடிதுடிப்பாய் வாழ்பவனிடம் சாவே காலம் தாழ்த்திதான் நெருங்குகிறது.

பாக்ஸ்டர்

# நமது நோக்கு

## பனை வள அபிவிருத்தி

பாதுகாப்பு, நெருக்கடி நிலை போன்ற காரணங்களைக் காட்டி, பல நிர்வாகத் தலைமைச் செயலகங்கள் கொழும்புக்கு மாற்றப்பட்டன அல்லவா?

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகமும் இவ்வாறு கொழும்புக்கு மாற்றப்பட்டது.

1971ஆம் ஆண்டின் 46வது சட்டப்படியும், 1975ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டப்படியும் இச்சபை அமைக்கப்பட்டது.

ஆனால்— பனைகள் ஏராளமாக உள்ள பகுதியில் இயங்க வேண்டிய சபை, பனைகள் இல்லாத பகுதியில் இயங்கி வந்ததைப் பலரும் வியப்போடு பார்த்து வந்தனர்.

தோட்டத் தொழில் அமைச்சின் கீழ் இயங்கி வந்த இந்தச் சபை பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றப்பட்டது.

1989இல் பிரதேச அபிவிருத்தி அமைச்சு ஒழிக்கப்பட்டதும், மீண்டும் பனம் பொருள் அபிவிருத்தித் தோட்டத் தொழில் அமைச்சுக்குச் சென்றது.

இப்படிப் பல நிர்வாக மாற்றங்கள் பல ஏற்பட்டிருந்தும, இச்சபைககு ஒதுக்கப்பட்ட நிதி பனம் பொருள் அபிவிருத்திக்கு எவ்வளவு தூரம் பயன்பட்டது என்பது இன்று எழுப்பப்படும் கேள்வியாகும்.

தமிழ் மக்களுக்காகப் பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறோம் என அரசுபலமுறை பிரசாரம் செய்து வந்தது

ஆனல் நடைமுறையில் இத்திட்டங்களுக்குநடந்ததென்ன?

இங்கு மக்களின் அன்றாடப்பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதோடு மாத்திரமல்லாது நீண்டகால அபிவிருத்திக்கெனத் திட்டங்களை ஆராய்ந்து வடிவமைத்து வரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதுபற்றி ஆராயவேண்டும்.

1983ல் பனம் பொருள் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை சர்வதேச உணவு வேளாண்மை நிறுவனமே அக்கறையோடுபரிசீலித்து ஏற்றுக்கொண்டது.

இதற்கு நடந்ததென்ன என்பன பற்றி ஆராய்வதும் பயன்தருமல்லவா?

# "இராணுவ முகாம்களை மூடினுல் அகதிமுகாம்களும் தானுக மூடப்படும்"

(யாழ்ப்பாணம்)

இராணுவ முகாம்கள்மூடப்படும்போது ஆதரவற்றோர் இல்லங்கள் தேவையற்றதாகிவிடும். இந்துக்களின் புனித ஸ்தலங்களான மன்னுர் திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் போன்ற ஆலயங்களிலும் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியிலும் அனுவசியமான முறையில் இராணுவ முகாம்களை கடந்த ஒரு தசாப்தமாக அரசாங்கம நிறுவிய காரணத்தினுல் தமிழீழத்தில் ஆதரவற்றோர் இல்லங்களும் அனுதைகளைப் பேணும் நிலையங்களும் பெருகிக்கொண்டு செல்கின்றது. இதற்கு ஒரு உண்மையான, உளப பூர்வமான தீர்வு ஏற்படவேண்டுமானுல் அர்த்தமற்ற முறையில் திறக்கப்பட்டுள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் மூடிவிட்டு புலிகளுடன் அரசாங்கம் உண்மையாகப் பேசவேண்டும்.

இவ்வாறு கைதடியில் நிகழ்ந்த இந்துசமயப் பேரவைக் கொடிவார ஆரம்ப விழாவில் உரைநிகழ்த்திய இந்துசமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சந்திரகிரிவன் குறிப்பிட்டுள்ளார்.

பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசிய பேரவைச் செயலாளர் கூறிதாவது:

யுத்தம் பணம் படைத்தவர்களை தெருவில் நிற்க வைத்துவிட்டது. தொழில் புரிந்தவர்களைத் தொழிலிழக்கச் செய்துவிட்டது. ஏழைகளைப் பரம ஏழை ஆக்கிவிட்டது. எங்கு திரும்பினுலும் அகதி முகாம்களும் ஆதரவற்ரோர் இல்லங்களும் நிறைந்து காணப்படுகிறது. இந்தக் கறைபடிந்த சாதனையை இலங்கை அரசாங்கம் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இதன் முன் முயற்சியாக இந்து ஆலயங்களில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களை மூடி வழிபாட்டிற்கு திறந்து விடுவதுடன், மக்கள் அப்பிரதேசங்களுக்குச் சென்று சுதந்திரமாக வாழ வழிசமைக்க வேண்டும். ஒரு இராணுவ முகாமை மூடும்போது குறைந்தது 100 அகதிகள் முகாம் தானுக மூடப்பட்டுவிடும். ஆகையால் தர்மத்திற்காக நடத்தப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடிவார ஆரம்பவிழாவில் தர்மம் நிலைப்பதற்காக அரசு அர்த்தமற்ற இராணுவ முகாம்களை மூடவேண்டும் என்ற புனிதமான செய்தியை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம் என்றூர்.

கொடிவாரத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் பேசுகையில்; பேரவைச் செயலாளரால் தமக்கு விடப்பட்ட வேண்டுகோளை நிறைவு செய்வதன் பொருட்டு ஜனுதிபதியையும், அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேச்சு நடாத்திப் பேரவைச் செய்தியை அவர்களிடம் கொடுப்பேன். அர்த்தமற்ற இராணுவ முகாம்களை மூடுவதன் மூலம் ஆதரவற்ரோர் முகாம் தானுக மூடப்படுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதற்கான நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு பேரவை சார்பில் அரசைக் கோருவேன் என்றூர், ரி

## பலதும் பத்தும்

### விளையாட்டு

குழந்தைகளுக்கு விளையாட்டு ஏன் அவசியம்? மகிழ்ச்சி ஊட்ட, பொழுது போக்க உடல், உள நலம் பேண, புலன்களுக்குப் பயிற்சிதர ஒற்றுமை, பணிவு தலைமைத்துவம் போன்ற பண்புகளை வளர்க்க எனப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ஷில்லர், ஹேர்பாட் ஸ்பென்சர் போன்ற ஆய்வாளர்கள் மிகை ஆற்றல் கொள்கையைக் கூறுகிறுர்கள். அதாவது குழந்தைகளிடம் உள்ள அதக அளவுள்ள உடல், உள சக்திகளை வெளியிட விளையாட்டுக்கள் உதவுகின்றனவாம்!

பிற்கால வாழ்க்கைக்கு குழந்தைகளைதயார் செய்யவே விளையாட்டுக்கள்உதவ வேண்டும் என்பது மெல்பிரான்சு (Melbranche) என்பவரது கொள்கை. சிக்கல்களை எதிர்நோக்கவும் வெற்றிதோல்விகளை மனப்பக்குவத்தோடு ஏற்கவும் சிறுவயதிலேயே பயிற்சியளிக்கவேண்டுமாம்!

— மயூரன்

## இராசி பலன்

13–3–1995
திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி –29)

ஏகாதசி: மு. ப. 3.57வரை பூரம்: முன்னிரவு 8.35வரை சித்தயோகம்; பிரதோஷ விரதம். இராகுகாலம் காலை 7.52 முதல் 9 22 வரை. சுபவேளை ந. ப. 12.22 முதல் 1.52 வரை

மேடம்: உறவினர்சங்கடம், உடல்அசதி, யோசனை.

இடபம்; இசைஞானம், குடும்ப அமைதி, பணவரவு.

மிதுனம்: கண்ணில் நோய், குளப்பநிலை, அவச்சொல்,

கடகம்: சாதுரிய நடவடிக்கை, தொழில் லாபம், பாராட்டு.

சிங்கம்: முரண்பாடு, வேலைக்கஷ்டம், அதிருப்தி.

கன்னி: விருந்தினர் மகிழ்ச்சி, காரியசித்தி, புதியதிட்டம்.

துலாம்: பயணநன்மை, கல்வியியல் சிறப்பு, மன நிறைவு.

விருச்சிகம், அமைதிகுன்றல், ஏமாற்றம், வழித்தொல்லை,

தனுசு: வேண்டாத தொல்லை, அமைதி குன்றல், பதட்டம்.

மகரம்: தெய்வசிந்தனை, நினைத்தது கைகூடல், விருந்து

கும்பம்: விரோதியை ஜெயித்தல், நற்பெயர். பிறர்க்கு உதவுதல்.

மீனம்: கருத்து மோதல், அமைதி குன்றல், தகாத வார்த்தை.

— ஜோஸ்யர்

### ஓய்வூதிய வவுச்சர்

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாதத்திற்குரிய வவுச்சர்கள் யாழ் செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 71

### இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதிவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 13-ம் திகதி திங்கள் பி ப. 2-30 மணிக்கு யா / இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் அதிபர் ந. தர்மபாலன் தலைமையில் நடைபெறும்.

### மன்னுரில் தபால்சேவை ஸ்தம்பிதம்

[மன்னுர்]

மன்னுர் பகுதியில் தபால் அதிபர்கள் பற்ருக்குறையால் அதிகமான தபால் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனுல் தபாலகம் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரி

### இலவச கண் சத்திர சிகிச்சை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பரீஷ் லயன்ஸ் கழகம் இரண்டாவது கட்டமாக தமது பிரிவிலுள்ள வறுமை நிலையிலுள்ள கண் பார்வை குறைநத 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச கண்சத்திர சிகிச்சையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. (72)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–03-13

திங்கள் இரவு

08-01 தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்களின் தேசம்
08 30 செய்திகள்
08-40 தரிசனம் நிகழ்ச்சியில் சங்கீத பூசணம் அரியாலையூர் சபாபதிப் பிள்ளை பாலசிங்கம் அவர்களுடனு செவ்வி

1995-03-14

செவ்வாய் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-03-13

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-01 சிந்தனைக்குச் சிலவினுடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்,

வீடு, பொருள் இழப்புகளுக்கு

# ஒய்வூதியருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

[யாழ்ப்பாணம்]

ஓய்வூதியர்களுக்கு அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட வீடு இழப்பு பொருள் இழப்புகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஓய்வூதியர்சங்க தலைவர் யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

யாழ் செயலகத்தில் யாழ் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்துடன் நடத்தப்பட்ட கூட்டத்திலே இந்தக்கோரிக்கை விடப்பட்டது. இதற்குப் பதிலளித்த யாழ் அரச அதிபர் க பொன்னம்பலம் இதுவிடயமாக ஓய்வூதிய பணிப்பாளருக்கு கோரிக்கை விடும்படி கேட்டுக் கொண்டார். ரி

மட்டுநகரில்

# இராணுவ கெடுபிடிகள் அதிகரித்து வருகிறது

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் படையினரின் சுற்றி வளைப்புகள் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை மற்றும் மட்டு மாநரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்பும் தேடுதலும் நடத்தப்படுகின்றது

இச்சுற்றிவளைப்புகளின் போது எவரும் கைதுசெய்யப்படாவிட்டாலும் பொது மக்கள்மீதான தாக்குதல் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இதேவேளை பெண்கள் மீதான பாலியல் வன்முறையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மட்டு. மாமாங்கம் மற்றும் புளியந்தீவுப் பகுதிகளிலும் இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது,

அம்பாறை மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம்களை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### தவக்கால நற்சிந்தனை

"உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய்இருங்கள்"

(லூக்; 6,36)

எங்கள் தந்தையாம் இறைவன் இரக்கம் மிகுந்தவராக இரக்கம் நிறைந்தவராக விளங்குகிறுர். இச்செயல் எம்மிலும் நிறைந்து விளங்க வேண்டும் என்று விரும்புகிறுர். மலைப்பொழிவிலும் "இரக்கம் உடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" என்று மொழிந்தார் நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுகிறோமா? எம்மிடம் இரக்க சிந்தை உண்டா! சிந்திப்போம்.

— தா. மைதிலி

உருவாகும் வாரிசுகளுக்கு
உயிலாக மரம் வைப்போம்

### பஸ் — எரிபொருள் லொறி மோதின

# சென்னையில் கோர விபத்து; 100 பேர் உடல் கருகிப் பலி

(சென்னை)

தமிழகத்தில் நேற்று தனியாருக்கு சொந்தமான பஸ் ஒன்றும், எரிபொருள் நிரப்பப்பட்ட லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலியானர்கள். பெருமளவினர் படுகாயமடைந்தனர்.

சென்னை செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் நேற்றுப்பகல் இடம்பெற்ற இக்கோர விபத்தில் பலியானவர்களில் பலர் பெண்கள், குழந்தைகள் என்றும் இவர்கள் திருமண நிச்சயார்த்தம் ஒன்றிற்கு சென்றுகொண்டிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸிற்குப் பின்னல் ட்ராக்டரில் பயணம் செய்தோரும் இத் தீவிபத்தில் பலியாகினர். பஸ்ஸும் இந்த எரிபொருள் லொறியும் மோதியதால் பெரும் வெடிச் சத்தத்துடன் லொறி வெடித்துச் சுக்குநூறுகச் சிதறியது. இதனுல் அப்பகுதியே அதிர்ந்தது வீதியெங்கணும் கருகிப்போன சடலங்களே காணப்பட்டன. பஸ்ஸின் இருக்கைகளை விட்டு நகரமுடியாத நிலையில் அவ்விடத்திலேயே உடல்களும் கருகிப் பலியாகின. -க-சி

---

### இனப்பிரச்சினையால்

## பாதிக்கப்பட்டோரின் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு, விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது: ஏற்கனவே இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பிரதேசச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 18ம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்பட வேண்டும் என்று புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்கத் தவறுபவர்களுக்கு நிவாரண உதவிகள் இடைநிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

---

### உலக மாஸ்ரேஸ் கிண்ணத்தை

## மே. இந்தியா சுவீகரித்தது

(பம்பாய்)

உலக மாஸ்ரேஸ் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மே. இந்திய அணி இந்திய அணியை 7 விக்கெட்டுகளால் வென்று சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

முதலில் ஆடிய இந்திய அணி 45 ஓவர்களில் 6விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வெங்சகார் 78 பந்தில் 105 ஓட்டங்களையும் சிறிகாந்த்-32, மொகிந்தர் அமர்நாத் - 23. ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்து ஆடிய மே. இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 252 ஓட்டங்களையும் பெற்றது. கிறினிச் 113 ஓட்டங்களைப் பெற்றுர். -சி

---

★ கணணி தொழில் நுட்பம் மூலம்

## புற்றுநோய் கலங்கள் இனங்காணல் தமிழ் டாக்டர் புதிய சாதனை

(ஒஸ்லோ)

கணணித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி புற்றுநோய்க் கலங்களை இனம் காணும் புதிய முறை ஒன்றை, நோர்வேயில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் டாக்டர் ஒருவர் கண்டுபிடித்துச் சாதனை புரிந்துள்ளார்.

நோர்வேயில் உள்ள றேடியம் ஆஸ்பத்திரியில் உருத்தடுப்பு ஆய்வுகூடத்தில் கணணி விஞ்ஞானியாகக் கடமையாற்றும் டாக்டர் யோகேசன் கனகசிங்கம் என்பவரே சிங்கப்பூரில் நடைபெற்ற கணணி பற்றிய சர்வதேச மருத்துவ மாநாட்டில் கலந்து கொண்டார்.

புற்றுநோய்க் கலங்களை, கணணித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தாணுகவே இனம் காணும் கண்டுபிடிப்பு பற்றி இம்மாநாட்டில் விளக்கியுள்ளார். இவர் இப்போது தனது புதிய முறை குறித்து விரிவுரைகளை நடத்தி வருகின்ருர் இவர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். -சி

---

### மட்டக்களப்பில்

## பணயம் வைத்த சிறுவனை கொன்ற இளைஞர்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கப்பம் கேட்டு கடத்தப்பட்ட ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டுநகர்ப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரின் மகனே கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டார்.

இக்கொலை தொடர்பாக சிறுவனின் தகப்பனின் கடையில் வேலை செய்யும் பதினேழு வயதான இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். - சி

---

## சமாதான முயற்சிக்கு தொண்டா ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும், ஐக்கியத்தை வளர்ப்பதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குத் தாம் ஆதரவு வழங்கப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கால்நடை, கிராமஅபிவிருத்தி அமைச்சருமான எஸ் தொண்டமான் தெரிவித்துள்ளார்

அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில்: சிறுபானமையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, தற்போதைய அரசாங்கம் முன்வந்திருப்பதால் தமது சட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும்.

அரசாங்கத்தை நிறுவுவதில் சிறுபான்மை மககள் தீர்க்கமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர் என்றும் கூறியுள்ளார். ம-சி

---

### இந்திய தேர்தல்:

## இரு மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வி

(புதுடில்லி)

நடைபெற்றுமுடிந்த மூன்று இந்திய மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளின்படி ஒரிசா மாநிலத்தில் காங்கிரஸ் [ஐ] கட்சியும், குஜராத்தில் பி. ஜே. பியும் மகாராஷ்டிரத்தில் சிவசேனுபி,ஜே. பி யும்முன்னணியில் உள்ளன.

ஒரிசா சட்டப்பேரவைக்கு அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி காங்கிரஸ் - 49, பி. ஜே. பி-05, ஜனதா தள்-22, ஜே. எம் எம்-04, ஜே. பி - வி-01, சுயேட்சை-04

மகாராஷ்டிராவில் 203 தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன அதில் காங்கிரஸ் -63, பி. ஜே. பி-41, சிவசேனு-48, ஜனதா தள்-07, சமாஜவாதி-03, விவசாய தொழிலாளர்கட்சி-06, சி. பி. ஐ. எம்-01, சுயேட்சை இதர கட்சிகள்-33. எம். பி சி-01

குஜராத்தில் மொத்தம் 182 இடங்களில் அறிவிக்கப்பட்ட 175 முடிவகளில் பி. ஜே. பி-118, காங்கிரஸ்-44, சுயேட்சை மற்றும் இதர கட்சிகள்-13. -க சி

---

இலங்கை அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியகுழு உறுப்பினரான திரு. லோறன்ஸ் திலகர் கையெழுத்திட்டு உலகத்தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது,

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, சுயநிர்ணய உரிமைக்கும் சுயாட்சிக்குமான தமிழர்களின் கோரிக்கை நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்டது. அரைநூற்றுண்டு கால சமூக மற்றும் அரசியல் அலட்சியம், இனப்பாகுபாடு, அரசியல் ஒடுக்கு முறை அரச பயங்கரவாதத்தின் இறுதி விளைவே தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையும் போராட்டமுமாகும். 40 000 திற்கும் மேற்பட்ட தமிழரை பலிகொண்ட 12 வருடகாலப் போரிலேவடக்கு-கிழக்கில்விடுவிக்கப்பட்டபகுதிகளில் சுயாட்சி அமைப்புக்களை கொண்டிருக்கும் ஒரு நிலையை தமிழர்கள் இன்று அடைந்துள்ளார்கள்.

இத்தகைய யதார்த்த நிலைதான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்துவதற்கு இலங்கை அரசை நிர்ப்பந்தித்தது. தமிழர்களுக்கென தனிநாடொன்றை நிறுவுவதே விடுதலைப் புலிகளின் இலட்சியமாக இருந்துவருகின்றபோதிலும் ஜனுதிபதி சந்திரிகா முன்வைத்த சமாதான முயற்சிகளுக்கு சாதகமான முறையில் விடுதலைப் புலிகளின் பிரதிபலிப்பை வெளிப்படுத்தி செய்கையிலும் காட்டினுர்கள்.

அத்துடன் 12 வருடப் போர்ஞல் சீரழிந்து கிடக்கும் தமிழ்ப்பகுதிகளை வழமைக்கு கொண்டு வரவேண்டும். தற்போதைய போதல் தவிர்ப்பை நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்றவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. -சி

---

## விரிவுரையாளர் சிற்றூழியர் கல்வியியல் கல்லூரியில் மோதல்

[வவுனியா]

வவுனியா கல்வியியல் கல்லூரியில் கடந்த வியாழன் இரவு விரிவுரையாளர் சிலருக்கும் சிற்றூழியர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் பலர் படுகாயமடைந்ததுடன் கல்லூரி விடுதிக் கண்ணுடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

குடிபோதையில் வந்த விடுதிச் சிற்றூழியர்கள் சிலர் விரிவுரையாளர்களுடன் வாக்குவாதப்பட்டதை தொடர்ந்து இக் கைகலப்பு ஏற்பட்டது.

இக்கைகலப்பில் விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் எவரும் ஈடுபடவில்லை. கைகலப்பில் ஈடுபட்ட பலர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், [சி]

---

உண்ணுவிரதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்வத்தைக்கும் அவசரச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் இந்த யுத்தக் கைதிகளின் விவகாரம் குறித்து, அரசு இதுவரை விடுதலைப் புலிகளுடன் எதுவிதத் தொடர்பையும் மேற்கொள்ளவில்லை. திரு. வாசுதேவ நாணயக்காராவும், 6 பிரதி அமைச்சர்கள் உட்பட 23 பொதுசன ஐக்கிய முன்னணி எம். பி.க்கள், பொருளாதார தடையை முற்ருக நீக்கி யுத்தக் கைதிகளை விடுவிக்குமாறு அரசை வற்புறுத்தியுள்ளதும் தெரிந்ததே. -சி

---

எரிபொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே எரிபொருட்களை அனுப்புவதால் விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை. வடபகுதி மக்களே இதனுல் அவலப்படுகிருர்கள். எனவே வடபகுதி மீதான எரிபொருள் தடையை முற்ருக நீக்குவது அவசியம் எனவும் கூறியுள்ளார். -ரி-சி

---

புதிய அரசியலமைப்பு

1ம் பக்கத்தொடர்ச்சி)

கப்படவுள்ளன.

இதனபடி இந்தியாவில் உள்ளதை விட குறிப்பிட்ட சில விடயங்களில் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமான தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும இணங்கியுள்ளன.

இந்தியாவில் மாநில அரசுகளை அரசியல் காரணங்களுக்காக கலைத்துவிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் இந்த அதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்படக் கூடாது என்பதில் சகல அரசியல் கட்சிகளும் இணங்கியுள்ளன.

13-வது அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் பொதுவான சட்டவரைவின் கீழ் வரும் விடயங்களை மாகாணசபைகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதற்கு அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் இணக்கம் கண்டுள்ளனர்.

இதேநேரம் தமிழ் - முஸ்லிம் மக்களது அரசியல் நலனைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் ஒருமித்த கருத்தை முன்வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி இ. தொ. கா, ஈ. பி. டி .பி, புளொட், மலையக மக்கள் முன்னணி என்பன ஒன்ருகச் சேர்ந்து தெரிவுக்குழு முன்னிலையில் ஒன்ருக கருத்து தெரிவிப்பதற்கு இணக்கம் கண்டுள்ளன.

எதிர்வரும் 17-ம் திகதி இந்த நான்கு கட்சிகளும் கூட்டாக தெரிவுக்குழு முன்னிலையில் ஒன்ருக சாட்சியமளிக்கவுள்ளன. (சி)

---

யாழ். மாவட்டத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் சில மின்பிறப்பாக்கிகள் நல்ல நிலையிலிருப்பதாகவும், அவற்றை இயக்குவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருவதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இலங்கை வானெலி தெரிவித்தது. ம-சி

---

பதவி உயர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைத் தலைமையகங்களில் இருக்கும் படையினருக்கே பதவியுயர்வு வழங்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு முப்படையினர் அடங்கிய குழுவொன்றை நியமித்ததும் பின்னர் அக்குழுவின் சிபார்சை ஏற்க பெருமளவு படையினர் மறுத்ததும் தெரிந்ததே. -ரி-சி

---

மோசமடைகிறது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படிப்படியாக இழந்துவருகின்றனர்.

சமந்திகலா என்ற உண்ணுவிரதி இரத்தவாந்தி எடுத்துள்ளார். மேலும் சுனில், சாப்தனு, நந்தனசிறி ஆகியோர் நேற்றுமாலை பெரிதும் களைப்படைந்த நிலையில் காணப்பட்டனர். இன்னும் ஓரிரு தினங்களில் உண்ணுவிரதிகள் நிலைமை மீளமுடியாத உணர்வற்ற நிலைக்கு செல்லலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. -க-சி

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-